உ

வேலுமயிலுந்துணை.

நூதன கிராம்போன்

சங்கீதகீர்த்தனாம்ருதம்

(பத்தாம் பாகம்)

10-இன்ச் D/S. தமிழ் ரிகார்டுகள்.

கிரீன் லேபில் ரிகார்ட்.

செங்கோட்டை ஸ்ரீமான்

S. G. கிட்டப்பா K-B சுந்தராம்பாள்

பாடிவருவது.

வள்ளித்திருமணம்.

வேடன் தரு.

இராகம்-ஹரிகாம்போதி-தாளம்-திஸ்ரரூபகம்.

சுப்-வலைதப்பியே குறமான்களே ஒரு
மானிங்கு கண்டீரோ நீங்களே
தலைதப்பியே யெந்தன் கணைதப்பியிங்ஙனம்
களைத்துவந்தமானை காணேனடியானே வ

வள்ளி-ஆர்காணும் நீர் சிலை வேடரே மானை
ஆட்புரத்தே வந்து தேடுறீர்
நீர்கண்ட மானுக்கு காலுண்டோகையுண்டோ
நேருக்குநேராக நெருங்கிப்பேசுவதுண்டோ ஆ

சுப்-வள்ளியே இந்தவழியாகவே நல்ல
புள்ளிமான் ஓடவே கண்டதுண்டோ
மெல்லியே யென்மனம் மேலும் மையல்கொண்டு
துல்லிதமாகவே தேர்ந்தேனுனைக்கண்டு வ

வள்ளி அத்தைமகன்போல பேசுகீர் வீண்
ஆண்மைத் தனங்களை காட்டுகீர்
எத்துக்கள்ளா மாய வித்தைக்கள்ளா காமப்
பித்துக்கள்ளா பெரும் ஜித்துக்கள்ளா போம் போம் ஆ

K B சுந்தராம்பாள் பாடியது.

பிளேட் நே. 1 நாரதரே அம்மாதவள்.

இராகம்-பியாக்-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

நாரதரேயம் மாதவள் தன்பேர்
யாதுரை செய்வீர் தீதணுகாமல் நா

சுந்தரியாளின் தந்தைதாய் யாரோ
அந்தரங்கமே செய்யுந் தொழிலேதோ நா

சென்றிடிலேயான் கொண்டிடு மோகம்
கண்டறிவாளோ விண்டிடுவீரே நா

பிளேட் நே 5095 கைவரிசை செல்லாது.

இராகம்-கமாஸ்-தாளம்-ஆதி.

பல்லவி.

கைவரிசை செல்லாது போம் ஓய் நாரதரே கை

அநுபல்லவி.

மெய்யது துடித்துமே மெல்லியை யடுத்துமே
தையலைக் கெடுக்க தைரியமாய் வந்தீரே கை

சரணம்.

கூட்டிக்கொடுப்பதுங்கள் கோத்திரத்தின் முறையோ
ஆட்டிப்படைக்கவேண்டாம் நீட்டிக்கெடுக்கவேண்டாம்
ஆவலாயோடி வந்தீர் உமக்கென்ன அக்கறையோ கை

எனக்குவந்த திந்தபுத்தி இணைக்கவந்தது போதும்
இனியிங்கு நில்லாதே எடுத்தடி பின்வையும் கை

பிளேட் நெ, 17 ஈராறுகாதிலே

இராகம்-தோடி-தாளம்-விருத்தம்.

ஈராறுகாதிலே யான்சொன்ன மொழி யெலாம்
யெள்ளளவும் கேட்கவில்லையோ
இக்கலியுகத்திலே பற்பலகிரியிலே
யென்னென்ன புதுமை செய்தாய்
பாருலகில் பெரிய மெஞ்ஞானப் பண்டிதா
உந்தன் பன்னிருகண்ணில்லையோ சொல்
பாவையர்கள் மோகமாய் அருணகிரி செந்தமிழ்
பாட்டின்மேல் நினைவுற்றவா
தீரனே பொற்கடக மணியுமணி மார்பனே
தேவர்பணி பொற்பாதனே
செட்டிமகனே திலக கட்டிமணியே யிந்த
தெந்தினம் செய்யலாமா
தீரா ஒய்யாரா செந்தூரா சங்காரா
சேவற்கொடிக் கதிகாரா
தேவர்சிறை மீட்டும் செல்வா எந்தன் திருமுகம்
பார்த்தருள் தென்பரங்கிரி வேலனே.

பிளேட் நெ. 169 மாதாட பாராதேனே.

இராகம்-கமாஸ்-தாளம்-சாப்பு.

பல்லவி.

மாதாட பாராதேனே மா ரமணனே — மா

அநுபல்லவி.

ப்ரீதிதோ விதப்ராண நாதியுட்னே ஒந்தது — மா

சரணம்.

அங்கள பளதிங்கள் — பிசலாசிதோருதே
ப்ரங்காத ரவகேளி — பீதியாகுதே சாமி — மா

மந்தமாருத பந்து — மருளுமாடுதே சாமி
அந்தவுளதேஹ — சந்திபாடுதே சாமி — மா

காமசரவு என்ன — மெய்க தகலிது
காமகிரி — நரஹரி கேனியாய வேனே — மா

மிஸ். வனஜாக்ஷி பாடியது.

பிளேட் நே, 4364 பெய்யாமழை பெய்யுதாம்.

விகடப் பாட்டு.

பெய்யாமழை பெய்யு தாம்
பெரிய வெள்ளம் வருகு தாம்

மீனு நத்து போட்டு கிச்சாம்
மீனு புலாக்கு போட்டு கிச்சாம்
மீனு கம்மல் போட்டு கிச்சாம்
மீனு சரடு போட்டு கிச்சாம்
பெரிய மீனு புடிச்சிக் கிச்சாம்
அதில்-சர்திலே பொர்திலே வர்தகை
சமைத்து வைச்சேன் சட்டியிலே பெ

அதில்-சர்திலே ஒன்று திண்ணேன்
அந்த-பொர்திலே ஒன்று திண்ணேன்

தலையிருக்க வாலிருக்க
முண்டமெங்கே போச்சுதடி

அந்த முண்டமெங்கே போச்சுது
அந்த கண்டமெங்கே போச்சுது
கன்னமிட்ட சோரனே அவனிட தீரனே
எந்தன் நடராஜனே இந்தசபையோர்களே
சின்ன சட்டியிலே போட்டாலது
ஜினுக்கு தாளம் போடுதாம்
பெரிய சட்டியிலே போட்டாலது
பெரிய தாளம் போடுதாம்

தள தள தள பள பள பள
பெரிய தாளம் போடுதாம் பெ

பிளேட் நே, 1944 போனல் வருமோ.

காமிக் பாட்டு.

பல்லவி.

போனல் வருமோ வாலீபம் ஒரு
போதும் வராதென்ன ஆக்ஷேபம் போ

அநுபல்லவி.

ஆனாலிதைநீ யோசித்துப் பாரு
அப்போது தெரியும் ஒப்பில்லை யாரும் போ

விருத்தம்.

முதிராத வாலிபம் என்னாளும் வராது
முதிர்ந்து சென்றால்
கதிராக விளையாது கட்டாக விற்காது
கடைத் தெருவே
எதிரில் விலை கொடுத்து கேட்டாலும்
எவரும் கொடார்
ததியானவேலை சந்தோஷித்திருக்க
தக்கநாளி திதுவே போ

தரு.

காய்ந்து மரத்திலே தொங்காது ஒரு
கடையிலுமே அது விற்காது
எய்த்து பறிக்க முடியாது அதை
எழுதவும் ஏட்டி லடங்காது போ

வெள்ளைச்சாமிகவிராயர்பாடியது.

பிளேட் நெ. 3065 கந்தய்யா நானுனக்கு.

ஷண்முகா ஏழையென்மேல் என்ற மெட்டு.

இராகம்-தேசிகதோடி-தாளம்-ஏகம்.

பல்லவி.

கந்தய்யா நானுனக்கு மகனல்லவோ
கனவானே குணவானே திருக்கழுகு மாமலை கடவுளே கந்

அடுக்கு சந்தம்.

கருத்திலொரு வருத்தமதை தவிர்த்தருளும்
திருத்தணிகைக் குழந்தை கந்
கானக்குறமகள் மருவிய யானைக்கொரு முகம் தழுவிய
கர்த்தனே மலரடி தஞ்சம் உத்தமி யனுதினம் கொஞ்சும்
[ரஞ்சித கந்
ஆறுமுக குக உன்னைவிட வேறு கெதியில்லை
அந்தரகை விந்தைமேவும் அசூர்தா கந்

அநுபல்லவி.

என் தாயு மானவனே
இன்பம் கொஞ்சும் செந்தூர்ப்ரமானந்தனே
ஏழை முகம் பாரய்யனே
ஏது சூது மீது கோபமா
மறகத நிறசழனிதனில் நடமிடுப்பழனி
கந்தமலர்ப் பாதமதிலே யானந்தந் தான்
சதா காலமெல்லாம் போற்றுவதுன் மைந்தன் தான்
இது செஞ்சொற்சொல் நாகமுத்து சந்தந்தான்
செப்பும் ஜெய வெள்ளைச்சாமி
சொந்தந்தான் க்ருபையருள் மெஞ்ஞான ௬௩

மிஸ் S. R. கமலம் பாடியது.

பிளேட் நே, 1999 வேண்டித்தவம்புரிந்தேன்.

இராகம்-காம்போதி-தாளம்-ஆதி.

வேண்டித்தவம் புரிந்தேன் வெகு விரதமிருந்தேன்
விரும்பியுனக்காகவே மகனே மகனே மகனே
ஆண்டியருளால் கரு வாக நீ யுதித்த பின்
அடிவயற்றிடந்தந்தேன் மகனே மகனே மகனே
ஒன்றுட லெட்டு தள்ளி ஒன்பதில் நாளை எண்ணி
ஓகோ நீ வரக்காத்தேன் மகனே மகனே மகனே
நன்று நீதி கற்பத்தில் நாடி வெளிவரவே
தான்வெகு துயரருந்தேன் மகனே மகனே மகனே
காதகன் புரிந்திட்ட கடூரத்தா லடுமையால்
காட்டில் மடிந்தாயோடா மகனே மகனே மகனே.
பாதகி நானுமென்ன பழிசெய்தேனோ வெனது
பத்தாவுக்கே யறியேன் மகனே மகனே மகனே

இராகம்-காபி-தாளம்-ஆதி.

பல்லவி.

சென்று கனிபறித்துக் கொண்டு-நான்
சீக்கிரம் வருவேனுனு மின்று-அவர் சென்று

அநுபல்லவி.

கன்றை யிழந்த பசுபோலே
கலங்குவார் தாய் தந்தையின் நாளே
கட்டழகி யாளே
இட்டமுடன் மேலோர் பசி
தீர்ப்பதென் கடமையாலே-நான் சென்று

சரணம்.

தந்தை தாய்க்குத் துணை யாரு-நீ
தனித்திருந்தவரைக் காரு அவர்
சிந்தை கலங்குவார் வேறு
சிஸ்ருஷை செய்வோரார் கூறு
சிறுத்தைப் புலி சீறும்
தீவினைகள் நேரும் இங்கு
தீரத்துடனிரு போய்வாரேன் நான் சென்று

பாலசுப்ரமணிய ஐயர் பாடியது.

பிளேட் நே. 1692 நந்தா உனக் கிந்தமதி.

இராகம்-வராளி-தாளம்-ஆதி.

பல்லவி.

நந்தா உனக் கிந்தமதி வந்ததென்ன தந்த தாரடா நந்தா

அநுபல்லவி.

அந்தரங்கஞ் சொந்தமாயி ருந்தது மறந்துபோய்
வந்தையாய் நினைந்த தன்றோ அந்த வேளை புத்தி யில்லை நந்

சரணம்.

கொல்லைக் காட்டு நரிபோலே பல்லைக்காட்டிப் பேசுராய்
கல்லைக் காட்டி கோபங்கொண்டு சொல்லைக்காட்டி யேசுவேன்
தில்லையென்று சொன்ன தெல்லா மில்லையென்று போச்சுதா
கல்லையென்று ஐயா சொன்ன சொல்லே நிஜ மாச்சுதா
சித்தமுந் தெளிந்து தா
உற்றது வுணர்ந்து தா
பத்தியுந் திலைந்து தா
கத்தலும் பறந்து தா
சட்டம் சட்டம் நல்லது நல்லது
மெத்த மெத்த சந்தோஷம் நந்

மதுரை பபூன் N. S. ஷண்முகம்

பாடியது.

காமிக் பாட்டு.

ஜப்பான் ஜிண்டான்
தப்பா திண்டால் தாழ்வுடன்
  வாழ்வும் போச்சுதே
அடியே என் கண்ணு   தாழ்வுடன்
உள்ளூரு மருந்தில்லையா
உங்களுக்குப் பொருந்தலையோ   உள்
  கொண்ட மனைவி
  அண்டையி லிருக்க
சண்டையிட் டன்னியப்
பெண்களைப் பார்க்கும்   ஜப்பான்

அ சோப்புந்த   சோடா
  காப்பி   சாடா
  துலக்கணும் யாவும்
  விலக்கணும்   சோப்பு
முன்னாளில்   குளிக்கலையோ   நம்
ஆயுள்   வலுக்கலையோ
அன்னியர் பண்டத்தைக் கொள்ளவும் வேணுமோ
நம் நாட்டுச்   சாமானைத்
  தள்ளவும்   வேணுமோ   ஜப்பான்

டாய்லட் பெஸ்டு   பவுடர்
சைஸூடனே கர்சிப்   பவுடர்   டாய்
  பாதி மீசை
  மீதி லாசை
பற்றுமோ மனங் கேட்டுமோ அந்த   பாதி
அவமானம்   மிகப்படவோ
வெகுமானம்   தடைப்படவோ
  இப்புவி   மீதினில்
  இப்பரத   கண்டம்
  ஒப்பிய   நாகரீகத்தையும்
  செப்பிட   ஜப்பான்

பிளேட் நே, ஜோக்கு கோண்ட மாப்பிள்ளைக்கு

பல்லவி.

ஜோக்கு கொண்ட மாப்பிள்ளைக்கு வாக்கப்பட்டுக்கோ
போக்கிரி பொம்பலே போடிபார்க்கவந்தாயே ஜோ

அநுபல்லவி.

ஆலவட்டக்காரி நீயும் சிலப்பட்டாயே
உன் வேலைகெட்டு பாலியத்தில் வெட்கம் விட்டாயே ஜோ

சரணம்.

கஞ்சிக்கூழுக் கெஞ்சி வந்து தஞ்சமென்றாயே
பிஞ்சிபீலி கொஞ்சி கொஞ்சி அஞ்சலென்றாயே ஜோ

புட்டாபட்டு சேலை கட்டி முட்டாக்கிட்டாயே
கட்டான உன் கெட்டிப்போட்டு தட்டா தெரிட்டாயே ஜோ

பசப்புக்காரி பல்லைக்காட்டி தசுக்கு செய்யாதே
பாலஷண்முக மாமன் ஆசை கசக்குதென்றாயே. ஜோ

சங்கீத வித்வான்

S. V. சுப்பைய பாகவதர் பாடியது.

பிளேட் நே. 31 பவளக்கோடிமீதில் ஆசை.

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்.

பல்லவி.

பவளக்கொடி மீதிலாசை மறப்பேனோ நானே
மறப்பேனோ நானே மாயப்பிரானே பவ

அநுபல்லவி.

மார்க்கமொன்று சொல்ல நீர்
தயங்குவது சரியல்ல அந்த
மாதரசி மீதிலாசை மறப்பேனோ பவ

கண்ணபிரானே புண்ணியந்தானே இது
எண்ணுதலேனே நான் பவ

அவலேசத்தாலே அதிர்ஷ்டம் மென்மேலே
அரும்பவளம் கொள்ள இதில்
அருமையிது வல்ல அந்த பவ

சாமியாசை மறப்பேனோ
அவளன்றியேது இப்புவியில் கிட்டாது
அழகென்றபோது அருள்வா யிப்போது
அவலேசத்தாலே நான் பவ

கோகிலமான மதுரை

மிஸ் சுப்புலக்ஷிமி பாடியது.

பிளேட் நே, 3682 எட்டுக்குடி வேலனடி.

இராகம்-உசேனி-தாளம்-ஆதி.

எட்டுகுடி வேலனடி எங்கள் முருகேசனடி
அஷ்டதிக்கெங்கும் பரவி ஞானதங்கமே
அடியாரைக் காப்பவண்டி

வேலின் முதல்வனடி வித்தகன் புதல்வனடி
மாலின் மருமகனடி ஞானதங்கமே
மந்தர முருகனடி

கார்த்திகை குமாரனடி காரண விஸ்தாரனடி
பார்த்திப சிவகாரனடி ஞானதங்கமே
பார்புகழ் செந்தூரனடி

குன்றுதோறும் வாழ்பவண்டி குறமகள் பாகனடி
என்றுமனுகூலனடி ஞானதங்கமே
ஏகாந்த லோலனடி

ஆர்மோனியம்

உரையூர் T-M-காதர்பாக்ஷா

பாடியது.

பிளேட் நே. 2716 கடவுள்தன் சேயா.

இராகம்-பியாக்-தாளம்-ஆதி-.

பல்லவி.

கடவுள் தன் சேயா கார்த்திகேயா க

அநுபல்லவி.

மடந்தை யுபாயா வள்ளி விதேயா
வாராய் பாராய் காராய் கட